# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**<u>ஆணை நாள். 08.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 9611/F/2023</u>**

திரு.மு.தினேஷ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
காவல் துறை துணைத் தலைவர்,
காவல்துறை துணைத் தலைவர்
அலுவலகம்,
விழுப்புரம்-605602 .. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.தினேஷ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.S.புவனேஸ்வரி, நிர்வாக அலுவலர், மாவட்ட காவல் அலுவலகம், விழுப்புரம் i/c சரக அலுவலகம், விழுப்புரம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 24.03.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காவல் துறை தலைவர் விழுப்புரம் அவர்களுக்கு 13.03.2023 தேதியில் கடிதம் மூலம் புகார் அளித்ததாகவும் கடித எண்.RT 435175927 IN இந்த புகார் மனு மீது காவல்துறை துணைத் தலைவர் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மின் கட்டணம் செலுத்தாமல் முறைகேட்டில் ஈடுபட்ட காவலர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் கோப்புகளின் நகல்கள் போன்ற 4 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் 26.04.2023 நாளிட்ட தகவல் அறியும்

உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் 29.05.2023 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 27.03.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளதாகவும் அதனைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 28.03.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் தகவலைப் பெற்றுக்கொண்டதாகவும் தனது மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை எனவும் ஆணையத்தின் முன் கூறினார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்தும் மற்றும் மனுதாரர் மேல் நடவடிக்கை தேவையில்லை என தெரிவித்ததையும் கருத்தில் கொண்டும் இவ்வாணையம் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9611/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
காவல் துறை துணைத் தலைவர்,
காவல்துறை துணைத் தலைவர்
அலுவலகம்,
விழுப்புரம்-605602

**<u>மனுதாரர்</u>**
திரு.மு.தினேஷ்,
18, சேணியர் வீதி,
மணலூர் பேட்டை அஞ்சல்,
திருக்கோவிலூர் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி-605754.

Copy to file: KR/PA